சிந்தனை
தொகுதி VII இதழ் I, II & III - 1995

# பூநகரிப் பிராந்திய தொல்லியல் மேலாய்வில் கிடைத்த தொல்பொருள் சின்னங்கள் – ஒரு வரலாற்று ஆய்வு

ப. புஸ்பரட்ணம்

இலங்கையில் தமிழ்ப் பிராந்தியத்தின் பாரம்பரிய வரலாறு முழுமையாக ஆராயப்படவில்லை என்பதும், அவ்வாறான நோக்கில் அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதும், நீண்டகாலக் குறைபாடாக இருந்து வருகிறது. இதற்கு சிங்கள மக்களைப் போல் தமிழ் மக்களிடையே வரலாற்றை பேணுகின்ற மரபு வளர்ந்திருக்கவில்லை என்றும், அரசமட்டத்தில் இலங்கையின் பிறபாகங்களில் மேற்கொள்ளப்பட்டது போன்ற வரலாற்று ஆய்வுகள் இப்பிராந்தியங்களில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் காரணங்கள் கூறப்பட்டு வந்துள்ளன. ஆயினும் அண்மைக் காலத்தில் இப்பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சில தொல்லியல் அகழ்வாய்வுகளும் (Excavations) தொல்லியல் மேலாய்வுகளும் (Expolorations) இப்பிராந்தியமும் இலங்கையில் தொடர்ச்சியான வரலாற் றைக் கொண்ட பகுதி என்பதை உறுதிப்படுத்த உதவின. இதற்குப் பூநகரிப் பிராந்தியமும் விதிவிலக்கல்ல என்பதை ஆசிரியர் மேற்கொண்ட ஆய்வின்போது கிடைத்த தொல்லியல் சின்னங்கள் உறுதிசெய்கின்றன. தமிழ்ப் பிராந்தியத்தின் சில இடங்களின் வரலாற்றை அறிந்துகொள்ள பாளி, சிங்கள இலக்கியங்களும், பிற்காலத்தில் எழுந்த தமிழ் இலக்கியங்களும் ஓரளவு உதவுகின்றன. அத்தகைய இலக்கிய ஆதாரமெதுவும் பூநகரிப் பிராந்திய புராதன வரலாற்றை அறிய உதவவில்லை. ஆயினும் இங்கு குறுணிக் கற்காலம் முதற்தொட்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரைக்கும் மக்கள் தொடர்ச்சியாக வாழ்ந்தமையையும், முக்கிய பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்தமையையும் உறுதி செய்யும் தொல்லியல் ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இலங்கையின் பெருநிலப்பகுதிக்கும், யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கும் இடையில் அமைந்துள்ள கல்முனை தொட்டு ஆலடி வரையிலான ஒடுங்கி நிலப்பரப்பையும் அதன் தொடர்ச்சியான வடமேல் மூலையிலுள்ள மணல்நீட்சிப் பிரதேசத்தையும் கொண்ட பகுதியை பூநகரிப் பிராந்தியம் எனக் கூறலாம். இதன் அமைவிடமானது தமிழ்நாட்டின் குமரிமுனையில் இருந்து புத்தளம் ஊடாக வடக்கு நோக்கியும்

(புத்தளம் மாந்தை பூநகரி) காவேரிப் பகுதியில் இருந்து தெற்கு நோக்கியும் (கல்முனை மண்ணித் தலை பூநகரி மாந்தை) ஆதியில் குடியேற்றங்கள் இடம்பெற வாய்ப்பாக இருந்துள்ளன. இவ்விடங்களே தென்னிந்தியாவுக்கும், இலங்கையின் பெருநிலப் பகுதிக்கும், யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கும் இடையிலான தொடர்புகளுக்கு பெருமளவு பயன் படுத்தப்பட்டிருக்க வேண்டும். இதை கோகில சந்தேஸிய என்ற சிங்கள (குயில் விடு) தூதுப் பிரபந்தத்தில் இருந்தும் அறிய முடிகிறது. இதில் கோட்டையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பறந்து வந்த குயிலின் பாதையாக புத்தளம் மாதோட்டம் (மாந்தை), சாவகக்கோட்டை கல்முனை (பூநகரிப் பிராந்தியம்) யாழ்ப் பாணம் போன்ற இடங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.[1] இச்சான்றுகள் அடிப்படை யாகக் கொண்டு ஆரம்ப காலத்தில் யாழப்பாண வரலாற்றை எழுதிய சிலர் இவ்விடங்களே ஆதிகாலத்தில் இருந்து உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக, அரசியல் தொடர்புகளுக்கு முக்கிய போக்குவரத்து மையங்களாக விளங்கின எனக்கூறினர்.2 புவியியல் ரீதியாக யாழ்ப்பாணப் பிரதேசம் முக்கியம் பெற முன்னர் பூநகரிப் பிராந் தியம் முக்கியத்துவம் பெற்றிருந்ததென் பது பேராசிரியர் ஸ்ரீதர் ஜெயசிங்கத்தின் கருத்தாகும். இக்கருத்தினை வரலாறு ரீதியாக இங்கு கிடைத்த தொல்லியல் சின்னங்கள் உறுதி செய்கின்றன.

இப்பிராந்தியத்தின் ஆதிக்குடிகள் யார்? எங்கிருந்து குடியேறினார்கள்? எப்போது குடியேறினார்கள் போன்ற அடிப்படைக் கேள்விகளுக்கு ஓரளவு விடை கூறுவதாக இங்கு கிடைத்த தொல் லியல் சின்னங்கள் விளங்குகின்றன.

இற்றைக்கு ஐம்பதாயிரம் வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் மக்கள் வாழ்ந்த தற்கான மனிதச் சுவடுகள் காணப்பட வில்லை என்பது மானிடவியலாளரின் கருத்தாகும். இதனால் இலங்கையில் ஆதிக்குடிகள் வேறொரு நாட்டில் இருந்து புலம் பெயர்ந்திருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. அந்நாடு தென்னிந்தியா என்பது வரலாற்றறிஞர் பலரின் கருத்து ஆகும்.3 இந்தியாவில் ஒரு பழைய கற்காலப் பண்பாடு (Palaeolithic Culture) இருந்ததைப் போல் இலங்கையில் இருந் ததா என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடிய வில்லை. ஆனால் தென்னிந்தியாவையொ த்த இடைக்கற்கால அல்லது குறுணிக்கற் காலப் பண்பாடு (Metolithic Culture) இருந்த தென்பதற்கு பலாங்கொடை கலாசாரம் சிறந்த உதாரணமாகும். இக்கலாசாரக் கல் ஆயுதங்களிற்கும் (Microlethic tools) தமிழ்நாடு திருநெல் வேலி தேரி கலாசாரக் கல்லாயுதங்களுக்கும் இடையிலான ஒற்றுமையை எடுத்துக் கூறிய அல்ஜின்4 இதையொத்த கல்லாயுதங்களை வட இலங்கையில் மாங்குளம் என்னும் இடத்தில் கண்டு பிடித்ததாகத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்தினர் மாந்தை அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்ட போது மாந்தையில் இருந்து பூநகரிப் பிராந்தியம் வரை இத்தகைய கல்லாயுத ங்களைக் கண்டுபிடிக்க முடிந்தது.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறான இடைக்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் இதுவரை கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிய வில்லை. அதேவேளை சுண்ணாம்புக் கற்பிரதேசத்தில் இக்கற்கால மக்கள் பயன்படுத்தி குவாட்ஸ் (Quartz) கற்களைப்

பெற்றிருக்கவும் வாய்ப்பில்லை.6 இவற்றைப் பிறஇடங்களில் இருந்து கொண்டு வந்து பயன்படுத்த வாய்ப்பிருந்தும் அவ்வாறு பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் தற்போதைய நிலையில் இங்கு இடைக் கற்கால மக்கள் வாழ்ந்தார்களா என எதுவும் கூறமுடி யாது உள்ளது. ஆனால் யாழ்ப்பாணத் தீபகற்பத்தினுள் அடங்கும் பூநகரிப் பிராந்தியத்தின் ஒரு பிரிவாகிய கல்முனை மண்ணித்தலை, வெட்டுக்காடு, கௌதாரி முனை போன்ற இடங்களில் இத்தகைய கற்களையும், ஒரு சில கல்லாயுதங்களையும் எம்மால் கண்டுபிடிக்க முடிந்தது. பெரும்பாலும் தென்னிந்தியாவிலும், இலங்கையின் சில பாகங்களிலும் இத்தகைய கற்களும், கல்லாயுதங்களும் நீரோடைகளிலும் நீராற்றுப் படுக்கைகளிலும் கண்டுபிடிக்கப்பட்டன. மூன்று பக்கமும் நீரினால் சூழப்பட்ட இப்பிராந்தியமும் தென்னிந்தியப் பகுதியில் இருந்து காலத்திற்குக் காலம் ஏற்பட்ட நீரோட்டத்தின் தாக்கத்திற்கு உட்பட்டதினால் இங்குள்ள மண்டிப்படிவுகளிடை இக்கற்கள் காணப்படுவது ஒரு பொதுவான அம்சமாகும். இவ் இடைக்கற்கால மக்களது வாழ்க்கை முறையும், கலாசார அம்சங்களையும் இக்கல்லாயுதங்களுடன் சேர்ந்து காணப்படும் (Associated artipactes) ஏனைய சான்றுகளைக் கொண்டே மதிப்பிடலாம். வெட்டுக் காட்டில் இக்கற்களுடன் சேர்ந்ததாக உலோகத்தாலான மீன்பிடிப்பதற்குரிய ஊசியும் (Metal fish hook) பிளேட் போன்ற ஆயுதமும் (Metal weapon) கிடைத்துள்ளன. இவற்றை இக்கற்கால மக்கள் பயன்படுத்தியதாகக் கருத இடமுண்டு. ஆயினும் இவற்றை அகழ்வாராய்ச்சியின் மூலம் அடையாளம் காணப்படும் கலாசார மண்படிவுகளின் வேறுபாட்டைக் கொண்டே திட்டவட்டமாகக் கூற முடியும். ஆனால் மணல்மேடுகள் நிறைந்த இப்பிராந்தியத்தின் பௌதிக அமைப்பு காலத்திற்குக் காலம் பருவகால மாற்றத்தின் தாக்கத்திற்கு உட்பட்டிருப்பதினால் முற்பட்ட கலாசாரப்படைகள் குழம்பிய நிலையில் பிற்காலப் பண்பாட்டுடன் கலந்து காணப்பட வாய்ப்புண்டு. இது இப்பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சிக்கு முக்கிய தடையாகும். ஆயினும் இங்கு இடைக் கற்கால மக்கள் வாழ்ந்தார்கள் எனக் கூறப்படும் கருத்துக்கு இது ஒரு பெருந் தடையாக இருக்கும் எனக் கருத முடியாது.

இலங்கைக்கு இவ் இடைக்கற்காலப் பண்பாடு தென்னிந்தியாவில் இருந்து பரவியதினால் தென்னிந்தியக் காலக் கணிப்பை வைத்தே இலங்கையில் இதன் தோற்றகாலம் மதிப்பிடப்பட்டு வந்தது. இதன்படி கி.மு. 12000 ஆம் ஆண்டில் இருந்து கி.மு. 700 வரை இலங்கையில் இப்பண்பாடு நிலவியதாகக் கூறப்பட்டது. ஆனால் சமீபத்தில் கிரான் தெரணியகலவினால் கித்துள்கொடையில் கண்டுபிடிக்கப்பட்ட இக்கலாசார சின்னங்கள் பல்வேறு படிமுறையில் C 14 காலக் கணிப்புக்கு உட்படுத்தியபோது இதன் தோற்ற காலம் கி.மு. 28000 ஆண்டுகள் என மதிப்பிடப்பட்டது.[7] இக்காலக் கணிப்பானது தென்னிந்தியக் காலக்கணிப்பை மறுபரிசீலனை செய்யத் தூண்டுவதாய் உள்ளது.

இவ்விடைக் கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து இப்பிராந்தியத்தில் பெருங் கற்காலப் பண்பாடு (Megalithic Culture) நிலவியதற்கான பல தடையங்கள்

கிடைத்துள்ளன. கந்தரோடையில் 1970இல் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் இத்தகைய பண்பாட்டுச் சின்னங்கள் பெருமளவுக்குக் கண்டுபிடிக்கப்பட்டன.[8] ஆயினும் பூநகரிப் பிராந்தியத்தில் இடைக்கற்காலப் பண்பாட்டை அடுத்து அதன் தொடர்ச்சியாக இப்பண்பாடு காணப்பட்டமை தமிழ்ப் பிராந்தியத்தின் ஆதிக் குடியேற்றம் பற்றிய எதிர்கால ஆய்வில் புதிய வரலாற்று உண்மைகளைக் கண்டுகொள்ள வழிவகுப்பதாக உள்ளது. இத்தகைய ஒரு அம்சமே இலங்கையின் புராதன தலைநகரங்களில் ஒன்றான அநுராதபுரத்திலும் காணப்பட்டது.[9]

பெருங்கற்காலப் பண்பாடென்பது தென்னாசியாவைப் பொறுத்தவரை திராவிட மொழிபேசும் பிரதேசமான தென்னிந்தியாவுக்கேயுரிய சிறப்பான பண்பாடாகும். இதன் தோற்றகாலம் கர்நாடகத்தில் (கல்லூரி) கி.மு. 1000 ஆண்டுகள் என கணிப்பிடப்பட்டுள்ளது.[10] இப்பண்பாடு முதுமக்கள்தாழி (Urnburial) கல்லறை (Cist burial) கற்கிடை எனப் பலவகை ஈமச்சின்னங்களை இறந்தோருக்கு நிறுவும் பண்பாடுடைய மக்களையே சுட்டுகிறது. ஈமச்சின்னங்களை மாத்திரம் கொண்டே இப்பெயர் சூட்டப்பட்டாலும் அதனிலும் முக்கியத்துவம் வாய்ந்த பல அம்சங்களை இப்பண்பாடு குறித்து நிற்கிறது. தென்னிந்தியாவில் இரும்பின் அறிமுகம் நீர்ப்பாசனத்துடன் கூடிய பயிர்ச்செய்கை விருத்தியடைந்த நிரந்தர குடியேற்றம், கறுப்பு சிவப்பு மட்பாண்ட உபயோகம் அரசதோற்றம் என்பன இப்பண்பாட்டுடன் தோற்றம் பெறுகின்றன. தமிழ்நாட்டில் சங்ககால நாகரிகம் இப்பண்பாட்டுப் பின்னணியில் தோன்றியதொன்றாகும்.

இலங்கையில் கி.மு. 700 ஆம் ஆண்டளவில் இருந்து இப்பண்பாடு பரவியது என்பதை அண்மைக்கால ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.[11] சமகாலத்தில் இப்பண்பாடு பற்றிய பரவலான ஆய்வுகள் சிங்கள மக்களின் மூதாதையினர் வடஇந்தியாவில் இருந்து வந்த ஆரியர்களின் வழித்தோன்றல் என்ற பாரம்பரியக் கருத்தை நிராகரிக்கும் அதேவேளை, இச்சிங்கள மக்களின் மூதாதையினரும் தென்னிந்திய திராவிடப் பெருங்கற்காலப் பண்பாட்டின் வழிவந்தவர்கள் என்ற கருத்தையும் உறுதிசெய்வதாக உள்ளன.[12] இலங்கையின் பெருநிலப் பகுதியில் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் அநுராதபுரம், கதிரவெளி, மாந்தை, பொம்பரிப்பு (புத்தளம்) போன்ற இடங்களிலும், நாட்டின் ஏனைய சில பகுதிகளிலும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இப்பண்பாடும் இடைக்கற்காலப் பண்பாட்டைப் போல் தென்னிந்தியாவுடன் பெருமளவு ஒத்துக்காணப்பட்டாலும் சிறப்பாக தமிழ்நாட்டுடன் நெருங்கிய ஒற்றுமை உடையதாகக் காணப்படுகிறது. மாந்தைக்கு எதிரேயுள்ள அரிக்கமேடும், பொம்பரிப்புக்கு எதிரேயுள்ள ஆதிச்சநல்லூரும் இப்பண்பாட்டில் ஒரே பிராந்தியம் போல் விளங்கியதென்பது கலாநிதி சிற்றம்பலம் அவர்களினது கருத்தாகும். இதனால் மாந்தைக்கு வடக்கேயுள்ள பூநகரிப் பிராந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டை இப்பின்னணியில் நோக்குவது பொருத்தமாகும்.

யாழ்ப்பாணத்தில் கந்தரோடை, ஆனைக்கோட்டை, காரைநகர், வல்லிபுரம் போன்ற இடங்களிலும் குடாநாட்டின் ஏனைய சில பகுதிகளிலும் இப்பண்பாட்டுக்குரிய சின்னங்கள்

இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.13 இவற்றுள் ஓரளவு முறைப்படியான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட கந்தரோடையில் இப்பண்பாட்டின் தோற்றகாலம் C 14 காலக்கணிப்பால் கி.மு. 400 எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. சமீபத்தில் இதன் காலம் மேலும் முற்பட்டதாக இருக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட இடங்களைக் காட்டிலும் கல்முனையில் இருந்து அநுராதபுரம் வரையிலான (கல்முனை, மண்ணித்தலை, வினாசியோடை, கௌதாரிமுனை, பரமன்கிராய், மட்டுவில்நாடு, நல்லூர், தியாகம் விழாத்திக்காடு, பள்ளிக்குடா, தெளிவரை) பூநகரிப் பிராந்தியத்தில் இப்பண்பாட்டுச் சின்னங்களைப் பரவலாகவும் கூடுதலாகவும் காண முடிகிறது. இப்பிரதேசத்தின் பௌதிக அமைப்பு, வரண்ட காலநிலை மழைக்காலத்தில் பெருகிவரும் வெள்ள வாய்க்கால்கள், இரும்பாயுதங்களினால் இலகுவாக அழிக்கக்கூடிய பற்றைக் காடுகள், மந்தை மேய்ப்பதற்குரிய தரவைகள், கடலுணவை ஆபத்தின்றிப் பெறக்கூடிய பரவைக்கடல் என்பனவற்றால் அடர்த்தியான குடியிருப்புகள் இங்கு தோன்றியதெனக் கூறலாம்.

இப்பண்பாட்டில் பெருங்கற்களை ஈமச்சின்னங்களுக்குப் பயன்படுத்தியதால் இது பெருங்கற்காலப் பண்பாடெனஅழைக்கப்பட்டது. ஆயினும் இவ் ஈமச் சின்னங்களுக்கு தாழிகளும், குழிகளும் பயன்படுத்தப்பட்டதென்பதை ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு, மாந்தை, பொம்பரிப்பு, ஆனைக்கோட்டை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இத்தகைய ஒரு அடக்க முறையே பூநகரிப் பிராந்தியத்திலும் பின்பற்றப்பட்டதாகத் தெரிகிறது. இங்குள்ள பள்ளிக்குடா, மண்ணித்தலை, வெட்டுக்காடு, கல்முனை போன்ற இடங்களில் பல தாழிகளின் உடைந்த பாகங்களும், இவற்றுடன் சேர்ந்ததாக மனித மிருக எலும்புகள், சங்குகள், இப்பண்பாட்டுக்கு உரிய ஏனைய சின்னங்கள் கிடைத்துள்ளன. பள்ளிக்குடாவில் கிணறு வெட்டியபோது பல சந்தர்ப்பங்களில் மனித எலும்புக் கூடுகளுடன் கூடிய முழுமையான தாழிகளும் வெறுமனவே புதைக்கப்பட்டிருந்த மனித எலும்புக் கூட்டைச் சுற்றிப் பல மட்பாண்டங்களும் பிற சின்னங்களும் வந்ததாக அவ்வூர்ப் பெரியவர்கள் சிலர் கூறினார்கள். அவ்வாறு கிடைத்த முழுமையான பொருட்களில் சிலவற்றை நாம் பெற்றுள்ளோம். இவ்விடங்களில் இருந்துதான் பெருங்கற்காலப் பண்பாட்டுக்கே உரிய கறுப்புச்சிவப்பு மட்பாண்ட ஓடுகளும் (Black and Red - pottory) சிவப்பு நிறம் கொண்ட முழுமையான பெரிய இரண்டு பானைகளும், தனிக்கறுப்பு, சாம்பல்நிறம் (Grey ware) கொண்ட மட்பாண்டத்தின் உடைந்த பாகங்களும், சுடுமண் பாவைகள், மண் விளக்குகள், சங்குகள் என்பனவும் கிடைத்துள்ளன. இவை வடிவ அமைப்பிலும் அவற்றின் தடிப்பு, பருமனிலும், அலங்காரத்திலும் கந்தரோடை, பொம்பரிப்பு அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர் மட்பாண்ட வகைகளைப் பெரிதும் ஒத்துக் காணப்படுகின்றன. இப்பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் ஓரளவு விவசாயத்தையும், பெருமளவுக்கு மீன்பிடித் தொழிலையும் மேற்கொண்டிருந்தனர் என்பதை இச்சின்னங்களுடன் காணப்பட்ட கொழு (Plough-share), கைக் கோடாரி (hand axe), கத்தி, பரவலாகக் கிடைத்த மீன்பிடிப்பதற்குரிய ஊசிகள் (Fish hooks) என்பன உறுதிப்படுத்துகின்றன. இவற்றுடன் பல வடிவங்களில்

செய்யப்பட்ட மணிகள் (Beads) அலங்காரப் பொருட்கள், கல்வளையல்கள் (Bangles), எலும்பினால் செய்யப்பட்ட கழுத்து மாலைகள் (necklace) அலங்காரப் பொருட்கள், கல்வளையல்கள், உலோகத்தினால் அமைந்த கால் சலங்கைகள் முதலியன கிடைத்துள்ளன. இவையனைத்தும் அடர்த்தியான குடியிருப்புகள் ஆதியில் இங்கிருந்ததை உறுதிசெய்கின்றன.

இப்பண்பாடு பற்றிய சமீபகால ஆய்வுகள் இந்துப் பண்பாட்டின் தொடக்கத்தைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளன. இங்கு காணப்படும் சுடுமண் சிற்பங்களில் சில தெய்வச் சிலைகளாகவும் கருதப்படுகின்றன. தமிழ்நாட்டில் இந்த ஆலயங்களின் தோற்றம் இப்பண்பாட்டுடன் தொடர்புபடுத்தப்படுகிறது.[14] ஆதிச்சநல்லூர் அரிக்கமேடு, பொம்பரிப்பு, கந்தரோடை, களபூமி போன்ற இடங்களில் கிடைத்த வேலும், திரிசூலமும் சில முருக வழிபாட்டின் தொன்மைக்கு சிறந்த சான்றுகள் ஆகும்.15 இத்தகைய வேறு சின்னங்கள் சில பூநகரி மண்ணித்தலை, வெட்டுக்காடு போன்ற இடங்களில் கிடைத்துள்ளதோடு முதல்முறையாக முருக வழிபாட்டிற்குரிய சேவல் சின்னமொன்றும் மண்ணித்தலையில் கிடைத்துள்ளது. தமிழ்நாட்டில் ஆதிச்ச நல்லூரைத் தவிர இலங்கையில் முதன் முறையாக இங்குதான் இச்சின்னம் கிடைத்தாகத் தெரிகின்றது.[16]

பரமன்கிராய் என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மட்பாண்டச் சிதைவுகளின் அழிபாடுகள் இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. நிலத்தில் இருந்து இரண்டடி ஆழத்தில் குவியலாக இருந்த சில மட்பாண்ட ஓடுகளை வெளியே எடுத்த போது வர்ணம் தீட்டப்பட்ட ஒரு மட்பாண்ட ஓட்டை எமது ஆய்வில் பங்கெடுத்த ஆசிரியர் மேகநாதனால் அவதானிக்க முடிந்தது. இதன் முக்கியத்துவம் இதில் புலமையுடைய ஒருவரால் ஆராயப்பட வேண்டியிருப்பினும் இது ஒரு பழமையான பண்பாட்டுச் சின்னம் என்பதை மட்டுமே இங்கே கூறக்கூடியதாக இருக்கிறது. மட்பாண்டங்களுக்கு வர்ணம் தீட்டும் முறை தென்னிந்தியாவில் புதிய கற்கால செம்புக்கால (Neolithic Chalcolithic Period) பண்பாட்டில் பெருமளவு பினபற்றப்பட்ட அம்சமாகும். தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் பிற்பட்ட காலப் பண்பாட்டில் இம்முறை குறைவாக இருந்துள்ளது. தென்னிந்தியப் பெருங் கற்கால மட்பாண்ட வகைகள் பற்றி ஆராய்ந்த குருமூர்த்தி இப்பண்பாட்டில் மட்பாண்டங்களுக்கு வர்ணம் தீட்டுவது அரிதாகவும், காலத்தால் முந்தியதாகவும் இருந்துள்ள தெனக் கூறியுள்ளமை கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய அம்சமாகும்.[17]

வெட்டுக்காட்டில் கிடைத்த கெண்டியுடன் கூடிய பானையும் (Spouted Pot) சுடுமண்ணாலான அகல்விளக்குகளும் இப்பண்பாட்டின் தொன்மையையும் சிறப்பையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இலங்கையில் இத்தகைய ஒரு பானை இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. தென்னிந்தியாவில் கர்நாடகத்தில் புதியகற்கால செம்புக் காலப் (Neolithic Chalcolithic Period) பண்பாட்டில் இவை பயன்படுத்தப்பட்டதற்கு ஆதாரங்கள் உள்ளன.[18] பிற்காலத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டில் இவை அரிதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் பாண்டிநாட்டில் உள்ள ஆதிச்ச நல்லூரிலும், கொற்கை



UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION

யிலும் கிடைத்த சாடிகளில் இப்பண்பு கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.19 அங்கு அதன் தோற்ற காலம் கி.மு. 800 ஆக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.20 இச்சான்றுகள் அனைத்தும் பூநகரியிலும் இப்பண்பாடு மிகத் தொன்மை ஆன தெனக் கருத இடமளிக்கிறது.

தென்னாசியாவில் வரிவடிவம் தோற்றம் பெறமுன்னர் பலவகையான குறியீடுகள் அடையாளச் சின்னமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. இதன் பயன்பாட்டை பி.பி. லால் சிந்துவெளியில் இருந்து பெருங் கற்காலப் பண்பாடுவரை தொடர்புபடுத்திக் கூறியுள்ளார்.21 இக்குறியீடுகள் சிலவற்றில் இருந்தே பிற்காலத்தில் பிராமி எழுத்து க்கள் தோன்றியதென்பது யஸ்தானி அவர்களின் கருத்தாகும்.22 இத்தகைய குறியீடுகளைக் கொண்ட பெருங்கற்கால மட்பாண்ட ஓடுகள் சில பூநகரியில் உள்ள வெட்டுக்காடு போன்ற இடங்களில் கிடைத்து ள்ளன. இக்குறியீடுகள் வரி வடிவங்கள் தோன்றியதன் பின்னர் அரிதாகப் பயன் படுத்தியதற்கு ஆதாரங்கள் இருப்பினும் இது ஒரு தொன்மையான பயன்பாடு என்பது மறுப்பதற்கில்லை. இச்சான்றுகள் காணப்பட்ட இடங்களில் இருந்து எமக்கு கிடைத்த முன்று மட்பாண்ட பிராமிச் சாசனங்கள் இங்கே சிறப்பாக குறிப்பிடத் தக்கவை. இவை இப்பிரதேசத்தின் நாகரிக வளர்ச்சியையும், கட்டமைப்பு உடைய சமூகம் ஒன்றை வழி நடத்தும் அரசு ஒன்று தோன்றியிருக்கலாம் என்பதையும் உறுதி செய்வதாக உள்ளன.

தென்னாசியாவில் பயன்படுத்தப்பட்ட காலத்தால் முந்திய எழுத்துக்கள் பிராமி என அழைக்கப்பட்டது. கி.மு. 3ஆம் நூற்றாண்டில் மெளரிய மன்னர் அசோகன் ஆட்சியுடன் வடஇந்தியாவில் தோன்றிய இவ்வெழுத்துக்களே இந்தியா வில் பரவலாக பிராகிருத மொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இதனால் இவ்வெழுத்துக்கள் அசோக பிராமி அல்லது வடபிராமி என அழைக் கப்பட்டது. சமகாலத்தில் இதையொத்த எழுத்துக்கள் தமிழ்நாட்டில் பயன்படுத்தப் பட்டிருந்தாலும் அசோக பிராமியில் பயன்படுத்தப்படாத தமிழ் மொழிக்குரிய தனித்துவமான எழுத்துக்கள் சில பயன்படுத்தப்பட்டதோடு பெரும்பாலான சாசனங்கள் தமிழ் மொழியில் எழுதப்பட் டிருந்தன. இதனால் தமிழ்நாட்டிற்குரிய இவ்வெழுத்துக்கள் தமிழி, திராவிடி அல்லது தமிழ்பிராமி என அழைக்கப் பட்டன.

இலங்கை பாரம்பரியமாக இந்தியப் பண்பாட்டின் செல்வாக்கிற்கு உட்பட்டிரு ந்ததினால் அங்கு ஏற்பட்ட எழுத்துக்க ளின் தோற்றம் சமகாலத்தில் இங்கும் பௌத்த மதத்தின் பரவலோடு அறிமுக மாகியது. இலங்கையில் இவை பெரும் பாலும் பிராகிருத மொழியில் பௌத்த மதம் சார்ந்த செய்திகளைக் கூறுவதினால் இவை வட இந்தியத் தொடர்பினால் பரவியதெனவும், சிங்கள மக்களின் முதாதையினர் வடஇந்தியாவில் இருந்து வந்து குடியேறியதற்கு இது ஒரு சான்றெனவும் கைகள் போன்ற வரலாற்று ஆசிரியர்கள் கூறினர். ஆனால் வட பிராமி எழுத்துக்கள் இங்கு பரவ முன்னரே தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் இங்கு பயன்படுத்தப்பட்டதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. இலங்கையில் காலத் தால் முந்திய வெசகிரி, மிகிந்தலைப் பிராமிச் சாசனங்களை ஆராய்ந்த கலா நிதி ஆரிய அபயசிங்கா இவை வடபிராமி

வரிவடிவங்கள் பரவ முன்னரே தமிழ் நாட்டில் இருந்து ஏற்பட்ட சமணமதச் செல்வாக்கால் தோன்றிய திராவிடி எழுத்துக்கள் என்ற புதிய கருத்தை முன்வைத்துள்ளனர்.23 இவைபோன்ற எழுத்துக்கள் வடபிராமி எழுத்துக்களின் செல்வாக்கினால் படிப்படியாக மங்கிப் போனாலும் இவை முற்றாக மறையவில்லை என்பதை பிற்கால பௌத்த சாசனங்களில் வரும் தமிழ்ப் பிராமி எழுத்துக்களும், தமிழ்ப்பெயர்களும் உறுதி செய்கின்றன.

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிச் சாசனங்களில் பெரும்பாலானவை பௌத்த குகைகளிலும், ஒரு சில மட்பாண்டங்களிலும், பொற்தகடுகளிலும் எழுதப்பட்டிருந்தன. இவ்வெழுத்தில் இருந்தே கி.பி. 3ஆம் நூற்றாண்டின் பின்னர் தமிழ்ப் பிராந்தியங்களில் ஒன்றான யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இதுவரை வல்லிபுரம் (பொற்சாசனம்) கந்தரோடை (மட்பாண்ட சாசனம்), ஆனைக்கோட்டை (சாசன முத்திரை) ஆகிய இடங்களில் மூன்று பிராமிச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் பூநகரிப் பிராந்தியத்தில் அருகருகேயுள்ள வெட்டுக்காடு, பரமன்கிராய் போன்ற இடங்களில் வெவ்வேறான மூன்று மட்பாண்டச் சாசனங்களின் உடைந்த பாகம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது தமிழ்ப் பிராந்திய வரலாற்று ஆய்வில் முக்கிய சம்பவமாக கருத இடமளிக்கிறது. கந்தரோடையில் பின்னர் கிடைத்த இரண்டாவது மட்பாண்டச் சாசனங்களாக இவை கொள்ளத்தக்கவை. இவற்றுள் முதலிரண்டு சாசனங்களும் பெருமளவு உடைந்திருப்பதினால் இவற்றின் முழுவாசகத்தையோ அல்லது அவற்றின் மொழியையோ திட்டவட்டமாக கூறமுடியாதிருக்கிறது. ஆயினும் இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் இவ்வரிவடிவங்கள் இப்பிராந்தியத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பது இங்கு எழுத்துவாசனையுடைய சமூகம் அக்காலத்தில் வாழ்ந்ததென்பதை நிச்சயப்படுத்த உதவுகின்றது.

இவற்றுள் வெட்டுக்காட்டில் கிடைத்த முதலாவது சாசனம் இரண்டு எழுத்துக்களைக் கொண்டது. தற்போது "லோம்" அல்லது "வோமி" என்ற ஒலிப்பெறுமானத்தைக் கொடுக்கலாம். இதன் இரண்டாவது எழுத்து தமிழ் நாட்டில் "வி" என்ற ஒலிப்பெறுமானம் கொடுத்து வாசிக்கப்பட்டுள்ளது. இந்த வாசகம் இச்சாசனத்திற்குப் பொருந்துமானால் இவ்வரிவடிவம் தமிழ்நாட்டில் இருந்து பரவியதெனக் கருதலாம். பரமன்கிராயில் கிடைத்த இரண்டாவது சாசனத்தில் ஒரு எழுத்து மாத்திரம் அழகாகவும் தெளிவாகவும் உள்ளது. இது "லி" என்ற ஒலி பெறுமானத்தைக் குறிப்பதாகும். இதையொத்த வரிவடிவங்கள் தமிழ்நாட்டில் அரிக்கமேட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பரமன்கிராயில் கிடைத்த மூன்றாவது சாசனம் தமிழ்ப் பிராந்தியத்தில் இது வரை கிடைத்த முக்கிய வரலாற்று ஆதாரங்களில் ஒன்றாக கருதத்தக்கது. இச்சாசனமும் உடைந்த நிலையில் இருந்தாலும் இதன் முதலிரண்டு எழுத்துக்களும் முழுப் பெயரையும் மூன்றாவது எழுத்து இயற்பெயரையும் குறிப்பதாக கருத இடமளிக்கிறது. இதன் முதலிரு எழுத்துக்களையும் வேள் அல்லது வேளர் எனவும் மூன்றாவது எழுத்தை "த" எனவும் வாசிக்க முடிகின்றது. இதன் இரண்டாவது எழுத்தின் "ள" தமிழ் நாடு

தவிர இந்தியாவின் பிறபாகங்களில் பயன்படுத்தப்படாது சமகாலத்தில் இலங்கையில் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது.[26] தமிழ்நாட்டிற்கேயுரிய இவ் எழுத்தை அறிந்திராத நிலையில் பெல், முல்லா, கோல்ட்ஸ்மித் போன்ற அறிஞர்களும் பிற்காலத்தில் பரணவிதானாவும் இதை அசோக பிராமிக்குரிய "ல" வாகக் கருதி இலங்கைப் பிராமிச் சாசனத்தில் வரும் இவ்வாசகத்தை வேல் அல்லது வேலு என வாசித்தனர். ஆனால் இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் பொறியியலாளரான பாக்கர் வவுனியாவில் கண்டுபிடிக்கப்பட்ட சாசனத்தில் உள்ள இவ்வெழுத்து திராவிடர் இங்கு வாழ்ந்ததை நினைவுபடுத்துகிறதெனக் கூறினார். சமீபத்தில் கலாநிதி சந்தமங்கல கருணாரத்தினா பேர்னாந்து போன்ற ஈழத்து அறிஞர்களும், பேராசிரியர் ரி.வி. மகாலிங்கம், ஐராவதம் மகாதேவன் போன்ற தமிழ்நாட்டு அறிஞர்களும் இது தமிழ்நாட்டுப் பிராமிக்குரிய எழுத்தென பதைச் சுட்டிக்காட்டி பரணவிதானாவினால் வேல் அல்லது வேலு என வாசிக்கப்பட்டதை வேள் அல்லது வேளா என வாசிப்பதே பொருத்தம் எனக் கூறினார். இவ்வாசிப்பே முற்றிலும் பொருத்தம் என சாசனவியலாளர் பலரும் ஏற்றுக்கொண்டிருப்பதினால் பூநகரியில் கிடைத்த சாசனத்தை தமிழ் மொழிக்குரிய வேள் அல்லது வேளா என வாசிப்பதே பெருமளவு பொருத்தமாகும்.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் ஏற்கனவே மூன்று பிராமிச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அச்சாசனங்கள் பெறாத ஒரு முக்கியத்துவத்தை மேற்கூறப்பட்ட மூன்றாவது சாசனம் பெறுகின்ற தெனக் கூறலாம். இலங்கை அரசியலில் அனுராதபுரம் அதிகாரத்தின் மையப் பீடமாக விளங்கிய போதிலும் நாட்டின் ஏனைய பகுதிகளில் சிற்றரசுகளும் குறுநில மன்னர்களின் ஆட்சியும் நிலவியதென்பதற்கு குணவர்த்தனா அவர்கள் பிராமிச் சாசனங்களில் வரும் சான்றுகளை ஆதாரம் காட்டினார். இவ்வாட்சியாளர் வேள், அய், பருமக, கமணி போன்ற குழுப்பெயர்களையும் விருதுப் பெயர்களையும் சூடியவர்களாக காணப்பட்டனர். இவற்றுள் குழுப்பெயரான வேள் இயற்பெயர்களோடு சேர்ந்து வருகின்றது. தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டில் வரும் இப்பெயர்களை வாசித்த பேராசிரியர் ரி.வி. மகாலிங்கம், மகாதேவன் போன்ற சாசனவியலாளர் இவை தமிழ்நாட்டில் சங்க காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த "வேள்'' எனப்பட்ட குறுநில மன்னர்களை குறித்த தென்றனர். இந்தவேள் பன்மையில் வேளீர் என அழைக்கப்பட்டது. இவர்களைச் சங்க இலக்கியத்தில் "தென்முடி வேளீர்'' "முதுகுடி வேளீர்'', "வேந்தரும் வேளீர்'' என விபரிக்கப்பட்டுள்ளது. தொல்குடிகளான இவர்களே தமிழ் நாட்டுப் பெருங்கற்காலப் பண்பாட்டைத் தோற்றுவித்தனர் எனவும் கூறப்படுகிறது. இவர்கள் குறுநில மன்னர்களாக பல இடங்களில் ஆட்சிபுரிந்ததை இப்பழந்தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. தமிழ்நாட்டில் பிற்காலத்தில் தோன்றிய வேள்நாடு கூட இவர்களின் வழியால் தோன்றிய ஒன்றாகும். சங்ககாலத்தில் இவர்கள் பெயரில் குலங்களும் இடங்களும் இருந்ததென்பதற்கு சங்க இலக்கியத்தில் வரும் "வேள்குடி'', "வேள்குலம்'', "வேள்கிராமம்'', "வேள்பட்டி'', "வேள்புரம்'' போன்ற பெயர்கள் சான்றாகும். இலங்கைப் பிராமிக் கல்வெட்டில்

இவ்வேள் இன்னொரு பெயருடன் இணைந்து வருவதுபோல் தமிழ்நாட்டில் இவ்வேள் இன்னொரு பெயருடன் இணைந்து வருவதை சங்க இலக்கியத்தில் வரும் வேள்-ஆய், வேள்-ஆவி, வேள்-எவ்வி போன்ற பெயர்கள் உறுதிசெய்கின்றன. அண்மையில் இலங்கைப் பிராமிக் கல்வெட்டில் வரும் வேள் பற்றி ஆராய்ந்த கலாநிதி சி.க. சிற்றம்பலம் அவர்கள் மேற்கூறப்பட்ட ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டி தமிழ்நாட்டைப்போல் இலங்கையிலும் வேள் அல்லது வேளா என்ற பெயரை உடைய குறுநில மன்னர்களின் ஆட்சியிருந்ததாகக் குறிப்பிட்டு உள்ளார். இக்கருத்தை ஏற்க பல சான்றுகள் துணையாக இருப்பதினால் பூநகரியில் கிடைத்த சாசனம் இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் அங்கு வேள் எனப்பட்ட குறுநில மன்னர்களின் ஆட்சியிருந்ததை உறுதிசெய்கிறதெனக் கூறலாம்.

மேலும் எமக்குக் கிடைத்த புராதன கால நாணயங்கள் பல இங்கு பரவலான ஆதிக்குடியிருப்புக்கள் இருந்ததென்பதையும், பெருங்கற்கலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் இப்பிராந்தியம் முக்கிய வெளிநாட்டு வர்த்தக மையமாக விளங்கியதென்பதையும் உறுதிப்படுத்துகின்றன. இவற்றுள் அச்சுக்குத்தப்பட்ட நாணயங்கள் (Punch-Mark Coins) சிறப்பாக குறிப்பிடத்தக்கவை. கி.மு. 6ஆம் நூற்றாண்டில் இருந்து இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் பயன்பாட்டுக்கு வந்த இந்த நாணயங்களே காலத்தால் முந்தியவையாகும்.[25] இவற்றை அடுத்து கி.பி. 1ஆம் நூற்றாண்டிற்கும் 6ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட ரோராம, லஷ்மி நாணயங்கள் பல இப்பிராந்தியத்தில் கிடைத்துள்ளன. இந்நாணயங்கள் அனைத்தும் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னரே இப்பிராந்தியத்துடன் தென்னிந்திய, ரோம வர்த்தகர்கள் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதற்குச் சான்று பகர்கின்றன. இதை மேலும் இங்கு பரவலாக கிடைத்த ரோம, அராபிய, சீனமட்பாண்டங்களும், கண்ணாடிப் பொருட்களும் உறுதிசெய்கின்றன. பள்ளிக்குடாவில் கிடைத்த முழுமையான ரோம சாடி இங்கே குறிப்பிடத்தக்கது. இத்தகைய சாடிகள் பல அரிக்கமேடு போன்ற இடங்களில் பரவலாகக் கிடைத்துள்ளன.[26] எனவே கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இந்நாடுகள் இப்பிராந்தியத்துடன் வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்தியமைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இங்கு பாரம்பரியமாக நாகரிகமுடைய மக்கள் வாழ்ந்ததே காரணம் எனக் கூறலாம்.

தமிழ்நாட்டில் பல்லவர் ஆட்சியை (கி.பி.600-900) தொடர்ந்து அங்கு ஏற்பட்ட அரசியல் பண்பாட்டு மாற்றங்கள் சமகாலத்தில் இலங்கையையும் பாதித்தது. இதற்கு அநுராதபுரம், தெவிநுவர, நாளாந்த, திருக்கோணேஸ்வரம் போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டிடச் சிற்ப அழிபாடுகள் சிறந்த உதாரணங்களாகும். இக்காலத்தில் பூநகரிப் பிராந்தியத்திலும் பல்லவர் தொடர்பு ஏற்பட்டிருந்ததற்கு சில ஆதாரங்கள் உள்ளன. பூநகரியின் உதவி அரசாங்க அதிபராக இருந்த கிருஷ்ணமூர்த்தி என்பவர் இப்பிராந்தியத்தில் இருந்து பல்லவர் காலத்தில் வெளியிடப்பட்ட சில நாணயங்களை எடுத்ததாக அறிகிறோம். இவை பல்லவர் கால வணிக கணங்களின் வர்த்தக நடவடிக்கைகள் இங்கிருந்ததை எடுத்துக் காட்டுகின்றன. மேலும்

இங்கு கிடைத்த இரண்டு புராதன சிலைகள் முக்கிய சான்றுகளாக கொள்ளத்தக்கவை. இவற்றுள் ஒன்று வெட்டுக்காட்டில் கைவிரல் அடையாளம் பதிக்கப்பட்ட புராதனகால ஓடுகளுக்கிடையே உடைந்த நிலையில் பல துண்டுகளாகக் கிடைத்தன. உலோகக் கலப்பினாலான இச்சிலையின் உடைந்த பாகங்களில் சில சிறந்த எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள் பிற்பட்ட பல்லவர் அல்லது முற்பட்ட சோழருக்குரியதாக இருக்கலாம் என்பதே பேராசிரியர் சிவசாமியின் கருத்தாகும். மற்றொரு பொன்முலாம் பூசப்பட்ட கருங்கற் சிலை அரசபுரத்திற்கு அண்மையில் உள்ள ஆலடிச்சோலையில் இருந்து எடுக்கப் பட்டதாகும். சிறிய பீடத்தில் கால்கள் மறைக்கப்பட்டு வளர்ச்சியடையாத நிலையில் புடைப்புச் சிற்பமாக இது செதுக்கப்பட்டுள்ளது. இதன் கலைப்பாணி கலை நுணுக்கம் அநுராதபுர கண்ட சேத்திய விநாயகர் சிலையைவிட வளர்ச்சியடைந்ததாகவும், திருக்கேதீஸ்வரத்தில் கிடைத்த பல்லவர்கால விநாயகர் சிலைக்கு சற்று முற்பட்டதாகவும் உள்ளது. இச்சிலை கண்டெடுக்கப் பட்ட இடத்திற்கு கிட்டிய தூரத்தில் உள்ள காட்டுப் பகுதியில் அரசபுரம் உள்ளது. இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னரே முதலியார் இராஜநாயகம் வட இலங்கையின் முக்கிய நகரங்களிற் கட்டிடச் சிதைவுகள் காணப் படும் இடங்களில் ஒன்றாக அரசபுரத்தைக் குறிப்பிட்டுள்ளார்.[28] இங்கு பாழடைந்த செங்கட்டிக் கட்டிடத்தையும் அருகே சிறிய குளத்தையும் அவதானிக்க முடிந்தது. இக்கட்டிடம் மிகப் பழமையானதென்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. ஆனால் இக்கட்டிடத்திற்கும் இச்சிலைக்கும் ஏதாவது தொடர்புண்டா என்பதை தற்போது திட்டவட்டமாகக் கூற முடியாதுள்ளது. அல்லிராணி வாழ்ந்த கோட்டையெனத் தற்கால மக்களால் அழைக்கப்படும் இக்கட்டிடப் பகுதியில் இருந்து பொன்முலாம் பூசப்பட்ட மகுடங்களையும், உலோகப் பாத்திரங்களையும் வேட்டையில் ஈடுபட்டோர் எடுத்ததாகத் தெரிகிறது. எவ்வாறாயினும் இக்கட்டிடப் பகுதி முழுமையான தொல்லியல் அகழ்வுக்கு உட்படுத்தப்படுமானால் பல வரலாற்று உண்மைகளைக் கண்டுபிடிக்க வாய்ப்புண்டு. இத்தகைய ஒரு இடத்தில் பல்லவ சோழன் தொடர்பு ஏற்பட்டதெனக் கூறுவது ஆச்சரியத்திற்குரிய விடயமல்ல. இவ்விடத்திற்குத் தெற்கேதான் வரலாற்றுப் பெருமைமிக்க மாந்தை துறைமுகம் காணப்படுகிறது. இத்துறைமுகம் பல்லவர் காலத்தில் வர்த்தகத்திற்குப் பயன்படுத்தப்பட்டதென்பதை அங்கு கிடைத்த பல்லவர்கால நாணயங்கள் உறுதி செய்கின்றன.[29] 1894இல் திருக்கேதீஸ்வர ஆலயச் சுற்றாடலில் இருந்து பல்லவர் கால சோமாஸ்கந்த விக்கிரகமும், பிள்ளையார் சிலையும், மகாசிவலிங்கமும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. ஞானசம்பந்தர் சுந்தரர், தனித்தனியாகப் பாடிய தேவாரங்களில் இருந்து இங்கிருந்த சிவாலயம் பற்றியும், பாலாவி தீர்த்தக் குளம் பற்றியும் அறிய முடிகின்றது. இதேபோல் அரசபுரத்திற்கு கிட்டேயுள்ள இடங்கள் பாலாவி பால பனிக்குளம் என பாரம்பரியமாக அழைக்கப்பட்டு வருவது மாந்தையுடன் அக்காலத்தில் இப்பிராந்தியம் கொண்டிருந்த தொடர்பினால் ஏற்பட்டதெனக் கருத இடமளிக்கிறது. மேலும் இப்பிராந்தியத்தில் உள்ள காஞ்சிபுலவு, பல்லாய், பல்லாய்குளம், காஞ்சி மீனாட்சி வளவு போன்ற இடப்பெயர்கள் பல்லவத்

தொடர்பை நினைவுபடுத்துவனவாக உள்ளன.

பல்லவர்களின் சமகாலத்தவர்களான பாண்டியர்கள் 9ஆம் 10ஆம் நூற்றாண்டு களில் அரசியலிலும், வர்த்தகத்திலும் முக்கியத்துவம் பெற்றபோது அதன் தாக்கம் இலங்கையிலும் ஏற்பட்டது. பாண்டிய மன்னனாகிய ஸ்ரீ மாற ஸ்ரீவல்லபன் இலங்கைமீது படையெடுத்து முதலாம் சேனனை வெற்றிகொண்டதன் மூலம் இலங்கை மன்னர்கள் பாண்டியர் களின் மேலாதிக்கத்தை ஏற்று ஆட்சி நடத்த நேரிட்டது.[30] இக்காலத்தில் பூநகரிப் பிராந்தியத்திலும் அவர்களது செல்வாக்கு ஏற்பட்டதென்பதற்கு இங்கு கண்டெடுக்கப் பட்ட பாண்டியர்கால நாணயங்கள் சிறந்த சான்றாகும். வட்டெழு த்தில் பழனி என எழுதப்பட்டிருக்கும் இந்நாணயங்கள் இலங்கையின் பிற பாகங் களில் கிடைத்ததாகத் தெரியவில்லை.[31] தமிழ் நாட்டில் வட்டெழுத்தின் முக்கியத்துவம் 10ஆம் நூற்றாண்டுடன் மறைந்து போவதால் இந்நாணயங்கள் 10ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை என உறுதியாக கூறலாம்.

பத்தாம் நூற்றாண்டு இலங்கை தென்னிந்திய வரலாற்றில் ஒரு முக்கிய காலப் பகுதியெனக் கூறலாம். இந்நூற்றா ண்டில் இருந்து எழுச்சியடைந்த சோழப் பேரரசு தமிழ்நாட்டின் இயற்கையெல்லை யைத் தாண்டிப் பிற இடங்களில் வர்த்த கத்திலும், அரசியலிலும் மேலாதிக்கம் செலுத்த முற்பட்டது. இதன் காரணமாக இலங்கை கைப்பற்றப்பட்டு 77 ஆண்டுகள் (கி.பி. 993-1070) சோழ நிர்வாகத்தில் மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயருடன் அழைக்கப்பட்டது. இதனால் முற்பட்ட காலங்களைவிட தென்னிந்தியப் படையெடுப்பாளர்கள், வர்த்தகர்கள், சோழ நிர்வாகிகள், கலைஞர்கள், பிராமணர்கள் ஆகியோர் இலங்கையின் முக்கிய நகரங் களில், துறைமுகங்களில் குடியேறியதுடன் அவ்விடங்களில் இவர்களின் வழிபாட்டி ற்காக சிறிய பல ஆலயங்களும் அமைக்கப் பட்டன. அத்தகைய ஆலயங்களில் ஒன்றாக பூநகரியில் உள்ள மண்ணித் தலையில் கண்டுபிடிக்கப்பட்ட சிவாலய த்தைக் கருத இடமுண்டு.

தற்போது பெருமளவு இடிந்த நிலை யில் உள்ள இவ்வாலயத்தின் அந்தராள மும், கர்ப்பகிரகமும் அதன் மேல் அமைந்த விமானமும் சோழர் காலத்தில் பின்பற்றப்பட்ட கலைமரபைப் பிரதிபலிப் பதாக உள்ளது. இவ்வாலயம் திருப் பொலநறுவையில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட இரண்டாம் சிவதேவாலயத் திற்கும் இடையே குறிப்பிட்ட சில அடிப் படை அம்சங்களில் ஒற்றுமையை கண்டு இவை சிறிய கர்ப்பக்கிருகத்தையும் அதன் முன்னால் அந்தராளத்தையும் கொண்டு ள்ளன. அத்துடன் இவ்வாலயங்களின் மேல் தேர் போன்ற வடிவில் கட்டப் பட்டுள்ள முன்றடுக்கு விமானத்தின் அமைப்புக்களும் அதன் வெளிப் புறங்களில் அமைந்த சில மாடங்களும், விமானத்தின் கூடுகளும், கூட்டுவரிகளும் அமைப்பு ரீதியில் ஒற்றுமை உடையவை யாகக் காணப்படுகின்றன. தென்னாசிய சிவாலயங்கள் பற்றி ஆராய்ந்த "டகி" என்பவர் ராஜராஜசோழன் ஆட்சியில் கட்டப்பட்ட கண்டேலகவர் ஆலயத்தின் கோமுகிக்கும் பொலநறுவை சிவாலய த்தின் கோமுகிக்கும் இடையிலான ஒற்று மையையும், வளர்ச்சியையும் எடுத்துக் காட்டினார்.[32] இவை இரண்டும் வடிவ

அமைப்பிலும், தொழில் நுட்பத்திலும் மண்ணித்தலைச் சிவாலயத்தின் கோமுகியை ஒத்துக் காணப்படுகின்றன.

மேலும் இவ்வாலயத்திற்கு அருகே மண்ணில் புதையுண்டிருந்த விமானந் தாங்கி பொம்மைகளும் நந்த விளக்கின் அகல்பாகமும், சோழர் காலத்திற்குரிய தெனக் கருதக்கூடிய தமிழ் எழுத்துப் பொறித்த சுதையாலான ஓடுகளும் இவ்வாலயம் சோழர் காலத்தில் கட்டப் பட்டிருக்கலாம் என்பதை உறுதிசெய்வ தாக உள்ளன. இவ் ஆலயத்திற்கு சில மைல் தொலைவில் இருந்து எடுக்கப்பட்ட பொன்முலாம் பூசப்பட்ட தெய்வச் சிலை யின் மகுடமும், கணையாழியும் சோழர் காலத்திற்குரியவையா என திட்டவட்ட மாக கூறமுடியாவிட்டாலும், இதையொத்த சின்னங்கள் சோழர் காலத்தில் பயன் படுத்தப்பட்டமைக்கு பல ஆதாரங்கள் உள்ளன. இவ்வாலயம் போத்துக்கேயர் காலத்திற்கு முற்பட்டதாக இருப்பதினால் இது சோழர் காலத்தில் கட்டப்பட்டிருக்க முடியும் என பேராசிரியர் பத்மநாதன், பேராசிரியர் சிவசாமி போன்றோர் கூறியிருப்பது நமது கருத்தை மேலும் உறுதி செய்வதாக உள்ளது. இவ்வாலயம் தொடர்பாக இலங்கைத் திராவிடக் கட்டிடக் கலையில் பரிச்சயமுடைய (எனது ஆசிரியர்) முன்னாள் பேராசிரியர் இந்திரபாலா அவர்களுடன் தொடர்பு கொண்டபோது இத்தகைய ஒரு கருத் தையே அவரும் கொண்டிருப்பது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய அம்சமாகும்.

இலங்கையில் சோழர் கட்டிய ஆலய ங்கள் பெரும்பாலும் நிர்வாக நகரங்க ளிலும், வர்த்தக மையங்களிலும் காணப் பட்டன. ஆதிகாலம் தொட்டு உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்துடன் தொடர்பு டைய பூநகரிப் பிராந்தியம் சோழர் காலத்தில் மேலும் முக்கியத்துவம் பெற்றிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதை எமது ஆய்வில் கிடைத்த சோழர் கால நாணயங்களே உறுதி செய்கின்றன. அத்துடன் இங்குள்ள மட்டுவில்நாடு என்ற கிராமத்தில் பாரம்பரிய பெயரை நோக்கும் போது சோழர் ஆட்சியில் இப்பிராந்தியம் ஒரு நிர்வாகப் பிரிவாகவும் இருந்திருக்க லாமா? என்ற கேள்வி எழுகின்றது. இலங்கையில் நாடு என்ற சொல் முழுத் தேசத்தைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டதே தவிர ஒரு கிராமத்தை அல்லது ஒரு குறிச்சியைக் குறிக்கப் பயன் படுத்தியதாகத் தெரியவில்லை. ஆனால் தமிழ்நாட்டில் சங்க காலத்தில் இருந்த ஒரு நாட்டுக்குள்ளேயே பல சிறுநிலப் பிரிவுகள் நாடு என்ற பெயர்கொண்டு அழைக்கப்பட்டது. இது மேலும் பல்லவர், சோழர் ஆட்சியில் நிர்வாகப் பிரிவைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டது.

சோழர் ஆட்சியில் இலங்கை ஒரு மண்டலமாகவும், அவை மேலும் வளநாடு களாகவும், நாடுகளாகவும் நிர்வாகத்தின் பொருட்டுப் பிரிக்கப்பட்டிருந்தன. குறிப்பாக பொலநறுவை நிகரிலிச் சோழவளநாடு எனவும், திருகோணமலை வீரபரகேசரி வளநாடு எனவும், மாந்தை அருண் மொழித்தேவ வளநாடு எனவும் பிரிக்கப் பட்டிருப்பதை இங்கு கிடைத்த சோழக் கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன.[33] பொலநறுவை இரண்டாம் சிவ தேவால யத்தில் உள்ள ஆதிராஜேந்திரன் கல்வெட்டு நாட்டார் பற்றிக் கூறுகின்றது. இது நாடு என்ற நிர்வாகப் பிரிவை அல்லது நாட்டு நிர்வாகத்தின் சபையைக் குறிக்கலாம்.[34] இக்கருத்தை உறுதிப்படு

த்துவதாக இலங்கையில் இருந்த கோட்டூர் நாடு பற்றி தென்னிந்தியச் சாசனம் ஒன்று கூறுகிறது.[35] இத்தகைய ஒரு பின்னணியில் மாந்தை அருள் மொழித்தேவ வளநாட்டிற்கு வடக்கேயுள்ள பூநகரி மட்டுவில் நாட்டை நோக்கும்போது இது சோழர்ஆட்சியில் மாந்தை நிர்வாகத்தினுள் நாடு என்ற சிறிய நிர்வாகப் பிரிவாக இருந்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது. அக்காலத்தில் இம்மட்டுவில் நாடு ஒரு கிராமத்தை மட்டுமன்றி முழுப் பூநகரிப் பிராந்தியத்தையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மேலும் இரண்டாம் இராஜாதிராஜன் கால (கி.பி. 1163-78) திருவாலங்காட்டுச் சாசனத்தில் மட்டிவால் என்ற இடத்தை இம்மட்டுவில் நாட்டுடன் தொடர்புபடுத்தக் கூடியதாக இருக்கிறது. இலங்கை மன்னன் பராக்கிரமபாகுவிற்கும் சோழ மன்னர்களுக்கும் இடையே நடந்த போராட்டத்தில் சோழரை எதிர்க்க பராக்கிரமபாகு வட இலங்கையில் ஊருத்துறை (ஊர்காவற்துறை), புலச்சேரி, மட்டிவால் (மட்டுவில்), மாதோட்டம், வலிகாமம் ஆகிய இடங்களில் படைகளை நிறுத்திவைத்ததாகவும், இப்படைகளைச் சோழப் படைத்தளபதி அண்ணான் பல்லவராயன் வெற்றி கொண்டு இவ்இடங்களைக் கைப்பற்றியதாகவும் இச்சாதனம் கூறுகிறது.[36] இச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மட்டிலால் என்ற இடம் தற்போதைய சாவகச்சேரிக்கு அண்மையில் உள்ள மட்டுவில் கிராமத்தையே குறித்ததென்பது பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி,[37] பரணவிதாண[38] போன்ற அறிஞர்களின் கருத்தாகும். இதையே பிற்கால வரலாற்று ஆசிரியர்களும் ஏற்றுள்ளனர்.

ஆனால் இவ்விடப்பெயர் பூநகரிப் பிராந்தியத்தில் கடற்கரையை அண்டியுள்ள மட்டுவில் நாட்டையே குறித்திருக்கலாம் எனக்கருத இடமுண்டு. அக்கால சோழரது அரசியல், வர்த்தக நடவடிக்கைகளை நோக்கும்போது இவை பெரும்பாலும் கடற்கரையை அண்டிய பகுதிகளிலும், துறைமுகங்களிலும், நகரங்களிலும் இருந்ததினைக் காணலாம். இச்சாசனத்தில் கூறப்பட்டுள்ள மாந்தை, ஊர்காவற்துறை, வலிகாமம் போன்ற இடங்களும் இதையே உறுதிப்படுத்துகின்றன. இங்குள்ள மட்டுவில்நாடு அமைந்துள்ள இடம் தெற்கே மாந்தையில் இருந்து வடக்கே மண்ணித்தலை வரை கடற்கரையை அண்டிய போக்குவரத்திற்கு வாய்ப்பாக இருந்ததோடு, இவ்விடங்களில் இருந்து நேரடியாக ஊர்காவற்துறைக்கும் அங்கிருந்து தமிழ்நாட்டிற்கும் ஆழமான கடற்பகுதியால் போக்குவரத்து செய்யவும் சாதகமாக இருந்துள்ளது. இத்தகைய ஒரு போக்குவரத்து தொடர்பு அக்காலத்தில் இருந்ததென்பதை இவ்விடங்களில் கிடைத்த இலங்கை தென்னிந்தியக் கல்வெட்டுக்கள்,[39] நாணயங்கள் சோழர்கால விக்கிரங்கள்[40] உறுதி செய்கின்றன.

இதுபோன்ற ஒரு முக்கியத்துவத்தை சாவகச்சேரிக்கு அண்மையில் உள்ள மட்டுவில் அக்காலத்தில் பெற்றிருக்கும் என தற்போதைய நிலையில் கூற முடியாது உள்ளது. மேலும் இவ்விடத்தை சோழப் படைகளோ அல்லது சிங்களப் படைகளோ கைப்பற்றி வைத்திருப்பதன் மூலம் கடல்மார்க்கமாக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பை தடுத்திருக்கலாம் எனவும் கூற இயலாது. இங்குள்ள கச்சாய் துறைமுகம் (கொடிகாமத்திற்கு அண்மையில்) இதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என வாதிட்டாலும் இரண்டுக்கும்

இடைப்பட்ட தூரம் அதிகமாக இருப்பதினால் இதையும் ஏற்கமுடியாதிருக்கிறது. ஆகவே சோழர் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள மட்டிவால் பூநகரிப் பிராந்திய மட்டுவில் நாட்டையே குறித்ததெனக் கூறுவது பெருமளவு பொருத்தமாகும்.

ஒரு இடப்பெயரை மட்டும் வைத்து இத்தகைய ஒற்றுமையைக் காண்பது தற்செயல் முடிவு எனக்கருத இடமளிக்கலாம். ஆனால் பூநகரிப் பிராந்தியத்தில் சோழத் தொடர்பை உறுதி செய்யும் பல பழமையான இடப்பெயர்கள் காணப்படுகின்றன. சோழ சாசனங்களில் நல்லூர், நல்லூர்நாடு, பல்லவராயன், தியாகபுரம், ஆலங்குடி, கிலாஞ்சி போன்ற இடப்பெயர்களும் நிர்வாகப் பிரிவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.[41] இதேபோல் பூநகரி மட்டுவில் நாட்டுக்கு அண்மையில் நல்லூர், தியாகம், கிராஞ்சி, ஆலங்கேணி போன்ற பல பழமையான இடப்பெயர்கள் உள்ளன. மட்டிவாலில் சிங்களப்படையை வெற்றிகொண்ட சோழப் படைத்தளபதி பல்லவராயன் பெயரில் பல ஊர் பெயர்கள் தமிழ்நாட்டில் இருப்பதை சோழ சாசனங்கள் உறுதி செய்கின்றன.42 இதேபோல் பூநகரி மட்டுவில் நாட்டுக்கு தெற்கே பல்லவராயன், பல்லவராயன் கட்டு, பல்லவராயன் கட்டுகுளம் போன்ற பெயர்கள் சோழப் படைத்தளபதியின் பெயரால் ஏற்பட்ட தென்ற பழைய கருத்தை ஏற்கக்கூடிய தாக இருக்கிறது.

இலங்கையில் சோழரது ஆதிக்கம் 1070இல் வீழ்ச்சியடைந்தாலும் சிங்கள மன்னர்களுக்கு எதிரான போராட்டம் உடனடியாக முற்றுப்பெறவில்லை. இதற்கு பராக்கிரமபாகு காலத்தில் (கி.பி 1153-1186) மாந்தை, மட்டிவால், வலிகாமம், ஊர்காவற்துறை போன்ற இடங்களில் நடந்த போராட்டங்கள் சிறந்த சான்றாகும். மேற்கே அராபிய, முஸ்லிம் வர்த்தகர்களை கட்டுப்படுத்தவும், இலங்கையின் பெருநிலப்பகுதியில் மேலாதிக்கம் செலுத்தவும் வடஇலங்கையில் தமது படைகளை வைத்திருந்த சோழர்கள் இதன்மூலம் இங்கிருந்தும், தமிழ்நாட்டில் இருந்தும் தென்கிழக்காசியாவுடன் அரசியல், வர்த்தக உறவை ஏற்படுத்த முடிந்தது. இத்தகைய ஒரு தொடர்பை பொலநறுவையில் ஆட்சிசெய்து கொண்டிருந்த சிங்கள மன்னர்களும் மாந்தை, பூநகரி ஊடாக ஏற்படுத்திய தாகத் தெரிகிறது. சூளவம்சம் முதலாம் விஜயபாகு பர்மாவுடன் கொண்ட தொடர்பு பற்றியும்[43] பராக்கிரமபாகு ஊர்காவற்துறையில் இருந்து இந்நாட்டுடன் யானை வர்த்தகத்தில் ஈடுபட்டது பற்றியும் கூறுகிறது.[44] இதை பர்மிய மூலாதாரங்கள் மட்டுமன்றி நயினாதீவில் கிடைத்த முதலாம் பராக்கிரமபாகுவின் தமிழ்க்கல்வெட்டும் உறுதி செய்கின்றன.45 மேலும் பூநகரிப் பிராந்தியத்தில் பரவலாகக் கிடைத்த விஜயபாகு (கி.பி. 1055-1111) பராக்கிரமபாகு (1153-1186) நிசங்கமல்லன் (1187-1196) லீலாவதி (1197-2200, 1209-1211) புவனேகபாகு (1273-1284) போன்றோர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களும் உறுதிசெய்கின்றன. வெட்டுக்காட்டில் இம்மத்திய கால நாணயங்கள் சவாரி வண்டிலை அலங்கரிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இது ஒன்றே இக்கால வர்த்தகத்தில் இப்பிராந்தியம் பெற்றிருந்த முக்கியத்துவத்திற்குச் சான்றாகும்.

1215ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக கருதப்படுகிறது. இவ்வாண்டில் ஏற்பட்ட கலிங்க மாகனது படையெடுப்பைத் தொடர்ந்து[46]

சிங்கள அரசவம்சங்கள் தெற்கு நோக்கி நகர வடஇலங்கையில் மேலும் அரசியல் அபிவிருத்திகள் ஏற்பட்டன. இத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த போது தான் சாவக இளவரசன் சந்திரபானு பாண்டியநாட்டில் இருந்தும் சோழ நாட்டில் இருந்தும் தமிழ்க் கூலிப் படைகளைத் திரட்டிக்கொண்டு வந்து மாதோட்டத்தில் வந்திறங்கியதாக சூள வம்சத்தில் இருந்து அறியமுடிகிறது.[47] இக்கட்டத்தில் தமிழ்நாட்டில் எழுச்சி யடைந்த இரண்டாம் பாண்டியப் பேரரசு இலங்கை அரசியலிலும் வர்த்தகத்திலும் மேலாதிக்கம் செலுத்த முற்பட்டது. இதன் தாக்கம் சமகாலத்தில் பூநகரியிலும் இருந்ததற்கு எமக்கு கிடைத்த பாண்டியர் கால நாணயங்களை முக்கிய ஆதார மாகக் கொள்ள முடிகிறது. 1258 இற்குரிய ஜடாவர்மனது கல்வெட்டு பாண்டியர் இலங்கை மன்னனிடம் திறைபெற்றது பற்றியும் 1263 இற்குரிய இன்னொரு கல்வெட்டு வீரபாண்டியன் ஈழத்தைக் கைப்பற்றி சாவகனின் முடித்தலையை எடுத்தது பற்றியும் கூறுகின்றன.[48] இதில் கூறப்பட்டுள்ள வீரபாண்டியனுக்கும் பூநகரியில் உள்ள வீரபாண்டியன் முனைக்கும் தொடர்பு இருப்பதாகக் கருத இடமுண்டு. மேலும் இங்குள்ள மறவர் குறிச்சி, மறவன்புலம் போன்ற இடங்கள் பாண்டியருடன் தொடர்பு படுத்தி ஆராயக் கூடியவை. இவ் வீரபாண்டியன் முனைக்கு கிட்டிய தூரத்தில்தான் பழைய புளியந் துறைத் துறைமுகம் காணப்படுகிறது. தற்போது காட்டுப் பகுதியில் பாழடைந் திருக்கும் இவ்வியற்கைத் துறைமுகத்தில் கப்பல்கள் வந்து தங்குவதற்கு ஏற்ற விதத்தில் குறுக்காக பல பொழிந்த கற்கள் வைக்கப்பட்டுள்ளன. பூநகரிப் பிராந்திய த்தில் மதநடவடிக்கையிலும், தேவாலயங் கள் கட்டுவதிலும் போர்த்துக்கேயர்,[49] ஒல்லாந்தர் ஈடுபட்டதாக அவர்களின் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எமக்கு கிடைத்த போர்த்துக்கேய, ஒல்லாந்து நாணயங்களும் கல்முனை காட்டுப் பகுதியில் இடிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட தேவாலயமும் இவற்றை உறுதிசெய்கின்றன. ஆயினும் இவர்களின் ஆவணங்களில் இங்கிருந்த புளியந்துறை துறைமுகம் பற்றி குறிப்பி ட்டதாக தெரியவில்லை. இதனால் இது போர்த்துக்கேயர் காலத்திற்கு முற்பட்ட தெனக் கருத இடமளிக்கிறது. இத்துறை முகத்திற்கும் வீரபாண்டியன் முனைக்கும் தொடர்புபடுத்தி சில கதைகள் இருப்பதி னால் இத்துறைமுகம் பற்றிய ஆய்வுகள் எதிர்காலத்தில் புதிய வரலாற்று உண்மைகளைக் கொடுக்கலாம்.

பாண்டியர் இலங்கைக்குப் படை யெடுக்க வந்தபோது அதற்குத் தலைமை தாங்கி வந்த ஆரியச் சக்கரவர்த்திகள் தமிழ்நாட்டில் பாண்டிய வம்ச வலிமை குன்றியபோது யாழ்ப்பாண அரசில் தம்மை சுதந்திர அரசர்களாக ஆக்கிக் கொண்டனர்.[50] இவர்களின் முன்னோர் இராமேஸ்வரப் பகுதியில் இருந்து வந்ததால் அவர்களின் குலவிருதுப் பெயர்களில் சேதுகாவலன் என்பது பிரதான இடம் பெற்றது. சேதுகாவலன் என்பது சேது தலமாகிய இராமேஸ் வரத்தையும் சேது சமுத்திரத்தையும் காவல்புரிகின்ற சிறப்பினை உடைய மன்னனைக் குறிப்பதாய் உள்ளது. மண்ணித்தலையில் உள்ள ஒரு இடம் சேதுகுளம் என அழைக்கப்படுகிறது. இச்சேது குளத்திற்கும் இராமேஸ்வர சேது சமுத்திரத்திற்கும் இடையே தொடர்பு இருக்கலாம் போலத் தெரிகிறது. குமரி

முனைக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடுகடலில் உள்ள இராமர் கல்லணை சேது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பூநகரிப் பிராந்தியத்தில் உள்ள ஒரு இடம் இராமர் கலப்பு என அழைக்கப்படுகிறது. இவ்விடப்பெயர் இராமேஸ்வரத்துடன் கொண்ட தொடர்பால் ஏற்பட்டதெனக் கருதலாம்.

இவ்வாரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த காலத்தில் சேதுவை தமது மங்கள வார்த்தையாக கல்வெட்டுகளிலும், அரச சின்னங்களிலும், நாணயங்களிலும் பயன்படுத்தியுள்ளனர். இத்தகைய நாணயங்களில் மூன்று வகையானது எமது ஆய்வில் பூநகரியில் உள்ள மண்ணித்தலை, கௌதாரிமுனை, வெட்டுக்காடு போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. கௌதாரிமுனையில் கிடைத்த ஒரு நாணயத்தில் ஒரு மீன் சின்னம் மட்டுமே ஒரு பக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இது ஆரியச் சக்கரவர்த்திகள் ஆரம்பத்தில் வெளியிட்ட நாணயம் என்பது பேராசிரியர் பத்மநாதனின் கருத்தாகும். இவர்கள் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களை மூன்று காலகட்டங்களாக வகுத்து சிலர் ஆராய்ந்துள்ளனர்.[52] இதன்மூலம் பூநகரிப் பிராந்தியம் யாழ்ப்பாணத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததென்பது தெரிய வருகிறது. 15ஆம் நூற்றாண்டுக்குரிய கோகில சந்தேஸிய குயில் விடு தூதுப் பிரபந்தத்தின் 287 செய்யுளில் அக்குயில் யாழ்ப்பாண அரசைப் பாதுகாக்கும் உப்பல்லவன் தெய்வத்தை வணங்கியதாக கூறப்பட்டுள்ளது.[53] இக்கோயில் யாழ்ப்பாணத்தில் எவ்விடத்தில் இருந்ததென்பது அறியப்படவில்லை. இந்நூலில் வல்லிபுரம் குறிப்பிடப்படாவிட்டாலும் அங்குள்ள புராதன விஷ்ணு ஆலயத்தை இது குறித்திருக்கலாம் எனவும் ஒரு கருத்துண்டு. ஆனால் யாழ்ப்பாணத்தின் தொடக்க வாயிலான பூநகரியில் உப்புலவன், உப்புலவன் கலப்பு என்ற பழைய பெயர்கள் உண்டு. இப்பிராந்தியம் பெருநிலப் பகுதியில் இருந்து ஏற்பட்ட ஆபத்தைத் தடுக்கும் மையமாக விளங்கி உள்ளதால் இவ்விலக்கியத்தில் கூறப்பட்டுள்ள உப்புலவன் ஆலயம் பூநகரியில் இருந்திருக்கலாம் எனக்கருத முடிகிறது.

எனவே பூநகரிப் பிராந்தியம் பற்றி எமக்கு கிடைத்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பொதுப்பட்ட சில முடிவுகளுக்கு வரக்கூடியதாக இருக்கின்றது. இங்கு கிடைத்த இடைக்கற்கால, பெருங்கற்காலச் சின்னங்கள் தமிழ்ப் பிராந்தியத்தின் ஆதிக் குடியிருப்பு மையங்கலில் ஒன்று. இப்பிராந்தியத்திலும் இருந்ததென்பதை உறுதி செய்கின்றது. இலங்கையில் பெருநிலப் பகுதிக்கும், யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான அரசியல் பொருளாதார பண்பாட்டு தொடர்புகளுக்கு இப்பிராந்தியமும் முக்கிய போக்குவரத்து மையமாக விளங்கியிருக்க வேண்டும். இலங்கையின் பெருநிலப் பகுதியில் தோன்றிய அரசுகளுக்கு வடக்கே அமைந்த பூநகரிப் பிராந்தியம் யாழ்ப்பாணத்தின் தொடக்க வாயிலாக இருப்பதினால் இவ்வரசுகளின் தொடர்பால் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அரசியல் பண்பாட்டு மாற்றங்கள் அபிவிருத்திகள் அதற்கு முன்னோடியாக பூநகரிப் பிராந்தியத்தில் நிகழ்ந்துள்ளன. இதனால் யாழ்ப்பாணத்தில் சுதந்திர அரசு ஒன்று தோன்றுவதற்கு முன்னால்

அதற்கான ஆக்கம் இப்பிராந்தியத்தில் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதுவது பொருத்தமாகத் தெரிகிறது. பூநகரிப் பிராந்தியத்தில் உள்ள வரலாற்றுப் பழமைவாய்ந்த இடப் பெயர்களான நல்லூர், கிராஞ்சி, கீரிமுனை, மறவர் குறிச்சி, மட்டுவில் நாடு, வெட்டுக்காடு, வெற்றிலைக்கேணி என்பன இதற்கு எதிரே யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் உள்ள இடங்களுக்கும் பெயரிடப்பட்டிருப்பது இக்கருத்துக்கு மேலும் ஒரு சான்றாகும். இதனால் யாழ்ப்பாணத்தின் பாரம்பரியத்தினை பூநகரிப் பிராந்திய வரலாற்றுடன் தொடர்புபடுத்தி ஆராய்வது அவசியமாக தெரிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. *Gunawardhena, W.F. (ed) Kohilasandisaya (Colombo 1924)*
   *1. Mavatu - Patana Vers 204 (Mototta - Pattanam) 2. Javaka Kottaya vers. 239*
   *3. Galmanaya (Kalmunai) Vers. 242 4. Yapapatune (Jaffna) Vers 246*
   *5. Punnole (Punnalai) Vers. 255*
2. *Rasanayagam, C ,* ***Ancient Jaffna*** *(Madras. 1926), p.8.*
3. *இந்திரபாலா. கா. "ஈழத்தின் தொல்குடிகள் தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்கள்."* ***வீரகேசரி வார வெளியீடு*** *(கொழும்பு 31.1.1969)*
4. *Allchin, B., "The Microlithic Sites of Tinnavelly District"* ***Ancient India,*** *No. 12. pp.4-20.*
5. *Carswall John and Martha Prickett, Mantai 1980.* ***A Preliminary Investigation Ancient Ceylon*** *No. 05., 1984. pp. 11-66*
6. *சிற்றம்பலம். சி.க.. "யாழ்மாவட்டத்தின் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வும் ஆதிக்குடிகளும்."* ***செந்தழல்*** *(ப.ஆ). பாலமனோகரன் (தமிழ்மன்றம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 1982)*
7. *Deraniyagala, S.V., "Sri Lanka 28000 B.C."* ***Ancient Ceylon*** *No.5 (Journal of the Archaeological Survey of Sri Lanka, 1984)*
8. *Vimala Begley "Proto-Historic Material from Sri Lanka (Ceylon) and Indian Contacts" Ecological Backgrounds of South Asian Pre-History (ed) Kenneth A.R. Kennedy and Gregory L.possehl* ***South Asian Occasional papers and Thesis, South Asia Program,*** *(Connell University 1973) pp. 193-194.*
9. *சிற்றம்பலம். சி.க.. மு.சூ.நூ. 1982*
10. *Agrawal, D.P.,* ***Karnataka Archaeology: A Chronology Reappriasal*** *Archaeology of Karnataka (ed) Narasinhamurthy. A.V. (University of Mysore), 1978. pp. 134-142.*
11. *Sittrampalam, S.K.,* ***The Megalithic Culture in Sri Lanka,*** *(Unpublished Thesis) Deccan College, University of Ponna 1989, p.310.*
12. *Geonetillake, "Sinhalisation the origins"* ***Lanka guardian*** *Vol. 3. No. 1. (1980), pp. 22-29*
13. *Ragupathy, P., "**Early Settlements in Jaffna an archaeological Survey** (Madras 1987)*
14. *காசிநாதன். நடன.. "கட்டிடக்கலை"* ***தமிழக நுண்கலை*** *(சென்னை 1978). ப.83.*
15. *Ragupathy, P., Op.cit. 1987*
16. *Nilakanda Sastri, K.A.,* ***A History of south India*** *(London 1958) p.55.*
17. *Gurumurthy, S.* ***Ceramic Traditions in South India*** *(Madras. 1981), p.127/*

18. *Ibid, p.513*
19. *Ibid, p.123*
20. *Ibid, p.122*
21. *Lal, B.B., "From the Megalithic to the Haroppan Tracing back the craffiti on the Pottery"* ***Ancient India,*** *No.16. pp. 4-24.*
22. *Indrapala, k, Is it an Indus-Brahmi epigraph?,* ***Hindu*** *24.4.1981*
23. *Ariyasinghe, A., Sinhalese Paleography (London 1965).*
24. *Mahadevan, I,* ***Corpus of the Tamil - Brahmi Inscriptions*** *(madras 1996) No. 27, p.6.*
25. சிவசாமி. வி.. **யாழ்ப்பாணக் காசுகள்** (மானிப்பாய் 1974) பக். 1-12
26. *Wheelar, R.E.M., Arikamedu: an Indo - Roman Trading Cost of India",* ***Ancient India,*** *No.2, pp.17-124.*
27. இந்திரபாலா. கா.. **இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை** (கொழும்பு 1970)
28. *Rasanayagam,C., op.Cit., 1926. p.84*
29. *Codrington, H.W.,* ***Ceylon Coins and Currency*** *(Colombo 1924) p.83.*
30. *Geiger, W., (Eng Tra)* ***Culavamas*** *(London 1973), Ch.50, vv. 12-45.*
31. *Desikachari, T.,* ***SOUTH INDIANCOINS*** *(New Delhi 1984), p.178 pt. IV.*
32. *Dhaky,M.A., "The Pranala in Indian, South Indian and Southeast Asian sacred Architecture"* ***Rupa Drati, Rupaslice, boner*** *commermoration (ed) Bettina Baumer (New Delhi, 1982) pp. 130-132.*
33. *Pathmanathan, S., "Chola rule in Sri Lanka" Proceedings of The Fourth International Conference seminar of Tamil Studies (ed) Vithiananthan (Jaffna 1980) pp. 19-30)*
34. *Ibid.,*
35. *Ibid.,*
36. *Nilakanda Sastri, K.A.,* ***"The Choles,*** *(Madras 1958) pp. 368-369.*
37. *Ibid.,*
38. *Paranavitana, S.,* ***"History of Ceylon,*** *Vol.1, Pt.11, (Colombo - 1990). p.483.*
39. *Indrapala, K., "A Progmentary Cola Inscription from Fort Hammenhed, Kayts,* ***Paleographia Tamilica,*** *Vol.1, Pt. (ed), K.Indrapala (Jaffna Archaeological Society 1971), pp. 10-18.*
40. சிவசாமி. வி.. "யாழ்ப்பாணத்தில் இந்துமதம்." **வசந்தம்,** (நெல்லியடி 1975)
41. *Hultzsch, E.,* ***South Indian Inscriptions,*** *Vol. I, II, III (New Delhi 1987).*
42. *Ibid.,*
43. *Culavamasa. LVIII, 9-9.*
44. *Ibid, LXXV 10-15*
45. இந்திரபாலா. கா.. "யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுக்கள்" **சிந்தனை** தொ.4. இதழ். 11 (பேராதனை 1964)
46. *Pathmanathan, S.,* ***Kingdom of Jaffna,*** *(Colombo 1987), p.91.*
47. *Culabamsa, Ch.88, vv. 63-64*
48. இந்திரபாலா. கா.. "யாழ்ப்பாண இராச்சியம் தோன்றிய காலமும் சூழ்நிலையும்." **இளங்கதிர்** 21வது ஆண்டு மலர் (பேராதனை). பக். 13-64.

49. *Friar Paula da Trinidade., C.F.M., Chapters on the Introduction of Christianity to Ceylon. (Chilaw 1972) p.210.*
50. *Pathmanathan, S., Op.cit, 1987, p. 161.*
51. *Ibid.,*
52. கிருஷ்ணராசா. செ., யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிடைத்த நாணயங்கள். **சிந்தனை.** தொ.1. இதழ்.3 (ப.ஆ) சிற்றம்பலம். சி.க.(யாழ்ப்பாணம் 1983) பக். 70-84.
53. *Gunawardena, W.F., Op.cit, 1924, v. 1287.*

*(யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட இவ்வாய்வுக் கட்டுரையைச் சரிபார்த்து பயனுள்ள ஆலோசனையை வழங்கிய பேராசியர் வி.சிவசாமி அவர்களுக்கு கட்டுரையாசிரியர் நன்றியைத் தெரிவிக்கின்றார்.)*

ஆ-ர்